III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.241/2021

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 17-03-2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : கார்த்திகேயன் | | Village | : |
| Father's / Husband's Name | : அன்பரசு | | Calling | : |
| Age | : | | Taluk | : |

**<u>குறுக்கு விசாரணை</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

நான் M.B.A வரை படித்திருக்கின்றேன். நான் புளூ மெட்டல் தொழில் செய்து வருகின்றேன். அதன் பெயர் ரம்யா புளூ மெட்டல். இந்த புளூ மெட்டலுக்கு நான் மட்டுமே முதலாளி. இது தவிர வேறு தொழில் எதுவும் எனக்கு இல்லை. நான் வட்டி தொழில் செய்கின்றேனா என்றால் இவர்களுக்கு மட்டும் தான் கொடுத்திருக்கின்றேன். இவர்களுக்கு மட்டும் தான் என்றால் அதன் பொருள் என்ன என்றால் இவர்களுக்கு மட்டும் வட்டிக்கு கொடுத்திருக்கின்றேன். நான் என்னுடைய பெயரான கார்த்திகேயன் என்னும் பெயரில் எத்தனை சேமிப்பு கணக்கு வங்கியில் வைத்திருக்கிறேன் என்றால் சாட்சி அப்பொழுதா அல்லது இப்பொழுதா என்று கேட்க அறிவார்ந்த வழக்கறிஞர் அன்றைய காலகட்டத்தில் என்று கூற சாட்சி ஒரு வங்கி கணக்கு HDFC வங்கியில் வைத்திருந்தேன் என்று கூறுகின்றார். 2016 முதல் 2020 வரை இந்த வங்கி கணக்கை மட்டுமே பராமரித்து வந்தேன். என்னுடைய வங்கி பரிவர்த்தனை முழுவதும் இந்த HDFC வங்கியில் மட்டுமே இருக்குமா என்றால் current Account லும் இருக்கும். என்னுடைய பெயரில் இரண்டு கரண்ட் அக்கவுண்ட் உண்டு. HDFC Bank ல் ஒரு கரண்ட் அக்கவுண்டும் Axis Bank ல் ஒரு கரண்ட் அக்கவுண்டும் இருந்தது. ரம்யா புளூ மெட்டலுக்கு HDFC வங்கியில் கரண்ட் அக்கவுண்ட்

இருக்கின்றது. ரம்யா புளூ மெட்டலின் கரண்ட் அக்கவுண்டை சொல்லமுடியுமா என்றால் சாட்சி தன்னுடைய அலைபேசியில் பார்த்து சொல்வதாக கூற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரும் ஒப்புக்கொண்டார். அந்த எண்.50200005416827. பிரதிவாதியின் கணவர் பாலகிருஷ்ணன் எனக்கு 2015 லிருந்து தெரியும். பாலகிருஷ்ணனை என்னுடைய நண்பர் உமா சங்கர் என்பவர் அவரது மாமா செல்வராஜ் என்பவர் மூலமாக அறிமுகப்படுத்தினார். செல்வராஜிடம் பாலகிருண்ஷன் வேலை செய்தாரா என்றால் பாலகிருஷ்ணன் செல்வராஜின் நண்பர். எனக்கும் பாலகிருண்ஷ்ணனுக்கும் இடையே உள்ள பணபரிவர்த்தனை பற்றி செல்வராஜிற்கு தெரியும். எனக்கும் பாலகிருஷ்ணனுக்கும் இடையே உள்ள பணபரிவர்த்தனை சம்மந்தமாக செல்வராஜ் மூலமாக நான் பணம் வாங்கியிருக்கிறேனா என்றால் அப்படி இல்லை பாலகிருஷ்ணனுக்கு தான் நான் பணம் கொடுத்திருக்கின்றேன். பாலகிருஷ்ணனை காண்பித்து செல்வராஜ் என்னிடம் பணம் கடன் வாங்கியிருக்கின்றாரா என்றால் அப்படி இல்லை. எனக்கும் பாலகிருஷ்ணனுக்கும் இடையேயான பணப்பரிவர்த்தனை தொடர்பாக செல்வராஜிற்கும் எனக்கும் இடையே ஏதாவது எழுத்து மூலமான ஒப்பந்தம் இருக்கின்றதா என்றால் அப்படி எதுவும் கிடையாது. செல்வராஜ் எனக்கு எதிராகவும் உமாசங்கருக்கு எதிராகவும் போலிஸ் கமிஷினர் அலுவலகத்தில் புகார் கொடுத்தாரா என்றால் போலிசில் கமிஷினர் அலுவலகத்தில் கொடுக்கவில்லை லோக்கல் போலிசில் கொடுத்தார். அந்த புகாரில் வழக்கறிஞர் அருண் என்பவரையும் போலிசில் கூப்பிட்டார்களா என்றால் அப்படி கூப்பிடவில்லை.

(அறிவார்ந்த 1வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).